பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 201
வியாழக்கிழமை 15 ஜூன் 2023
ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# காணி அபகரிப்பின் சூத்திரதாரி விதுரவே!

## அவரைப் பதவி விலக்குமாறு ரணிலிடம் சுமந்திரன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 15**

**அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் பணிப்புரையின் கீழேயே சட்டவிரோத காணி அபகரிப்புகள் நடைபெறுகின்றன. அதனால் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக்க வேண்டும்.**

» 11

மாநாட்டில் உரையாற்ற

## ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 15
பரிஸில் நடைபெறவுள்ள புதிய உலகளாவிய நிதிய ஒப்பந்தத்துக்கான உலகளாவிய தலைவர்கள்

» 11

## முரண்டு பிடித்தால் முற்றாகக் கலைப்பு

### பெரமுனவுக்கு பாடம் கற்பிக்க ஜனாதிபதி ரணில் தீர்மானம்



கொழும்பு, ஜூன் 15
சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியை முன்னெடுப்பதற்குச் சிக்கல் ஏற்படுத்தினால் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரம

» 11

## இராணுவப் பிடியிலேயே இருக்கவேண்டும் வடக்கு

### வலியுறுத்துகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 15
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து படைகளை அகற்றக்கூடாது. அவ்வாறான நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவேன் என்று முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

**விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்**

## 3 வயதுச் சிறுவனுக்கு எமனாக மாறிய 'கேற்'



### கேப்பாபிலவில் சோகம்

முல்லைத்தீவு, ஜூன் 15
வீட்டின் இரும்புக் 'கேற்' கழன்று வீழ்ந்ததில் 3 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை முல்லைத்தீவு, கேப்பாபிலவில் நடந்துள்ளது.

» 11

## கேட்காமலேயே பதவி தரவேண்டும் ரணில்!

### மிரட்டும் தொனியில் பஸில் கருத்து

கொழும்பு, ஜூன் 15
ராஜபக்சக்கள் கூண்டோடு வீழ்ந்து விட்டார்கள் என்று எவரும் கனவு காணக்கூடாது. இந்த ஆட்சியை நிறுவிய ராஜபக்சக்கள் பதவிகளை மாத்திரம் துறந்து விட்டுப் பங்காளர்களாகத் தொடர்ந்தும் இருக்கின்றார்கள்.

» 11

## ஐரோப்பாவுக்குள் புக முயன்ற 150 பேர் ருமேனியாவில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 15
ருமேனியாவில் இருந்து சட்டவிரோதமாக எல்லையைக்கடக்க முயன்ற சுமார் 150 புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

» 11



## மக்களின் வீடமைப்புக்கு இராணுவமும் உதவுமாம்

### மாவட்டச் செயலரிடம் உறுதியளித்தார் புதிய இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 15
மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படும் பிரதேசங்களில் குடியமரும் மக்களின் வீட்டுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இராணுவம் உதவும்

» 11

## அசையாது அரசாங்கம் பிரதமர் தினேஷ் திடம்!



கொழும்பு, ஜூன் 15
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு தொடர்ந்தும் பயணிக்கும். சூழ்ச்சிகள் மூலமும், வதந்திகள் மூலமும் இந்த அரசைக் கவிழ்க்கமுடியாது - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

» 11

## காங்கேசன்துறைமுகம் நாளைமறுதினம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
காங்கேசன்துறைமுகம் நாளைமறுதினம் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் திறக்கப்படவுள்ளது.

» 11

## காங்கேசன்துறை வரவுள்ள இந்தியச் சொகுசுக் கப்பல்!

யாழ்ப்பாணம், ஜூன் 15
சென்னை துறைமுகத்தில் இருந்து இலங்கை வந்துள்ள பயணிகள் சொகுசுக் கப்பல் எதிர்வரும் சனிக்கிழமை காங்கேசன்துறைமுகத்துக்கு வரவுள்ளது.

» 11

## போதைக்கு அடிமையான இளைஞன் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 15
மன்னாரில் போதைப் பாவனைக்கு அடிமையாகிய 21 வயதான இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார். இளைஞரை அவரது குடும்பத்தினர் அதிலிருந்து மீட்க எடுத்த முயற்சியில், அது பயனளிக்காத நிலையில் இளைஞர் உயிரை மாய்த்துள்ளார்.

» 11

## கூரையைப் பிரித்து நகைகள் திருட்டு!

### நயினாதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
நயினாதீவில் வீட்டுக் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் சுமார் 22 பவுண் நகைகளைக் அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

» 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் தொடர்பில் பேச ரணிலுக்கு அதிகாரம் இல்லை!

## அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

இலங்கையின் தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க காணிகள் குறித்துப் பேச ஜனாதிபதி ரணிலுக்கு எதுவித அருகதையும் இல்லை என்று மெதகொட அபய திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் பதவிக்காலத்தின் எஞ்சிய பகுதியொன்றிலேயே, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார். அந்த வகையில் இலங்கையின் தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க காணிகள் குறித்து கருத்து வெளியிட அவருக்கு எந்த அருகதையும் இல்லை. அது குறித்து முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வாய்திறந்து தனது கருத்தை முன்வைக்கவேண்டும். புத்தரின் கேசதாது வைக்கப்பட்ட இடத்தைக்கூட ஜனாதிபதி வெளிச்சவீடு போன்று சித்திரிக்கின்றார். ஆனால் அந்த இடம் பௌத்தர்களுக்கு மிகப் புனிதமானதும் முக்கியமானதுமான இடமாகும்.

கடந்த 2015ஆம் ஆண்டிலும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகப் பதவிக்குக் கொண்டு வந்து இதேபோன்று தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க இடங்களை அழிவுக்குள்ளாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தடுத்து நிறுத்தவே 69 லட்சம் மக்களின் வாக்குகள் கொண்டு கோத்தாபயவைப் பதவிக்குக் கொண்டு வந்தோம். வடக்குப் பிரிவினைவாதிகளின் வாக்குகளுக்காக, தொல்பொருள் முக்கியத்துவம் கொண்ட இடங்களை யாருக்கும் பகிர்ந்தளிக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் - என்றார். (ம)

## படையினர் வசமுள்ள

# காணிகளை விடுவிப்பதற்கு சரத் பொன்சேகா எதிர்ப்பு!



**கொழும்பு, ஜூன் 15**

**வடக்கு, கிழக்கில் படையினர் கைப்பற்றி வைத்துள்ள பொதுமக்களின் காணிகளை அரசியல் தேவை கருதி விடுவிக்கப்படுவதை எதிர்ப்பதாக முன்னாள் இராணுவத்தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாட்டை ஆட்சி செய்பவர்கள் மட்டுமன்றி மக்களும் படையினரை மறந்து விடுகின்றனர். இப்போது சிலருக்கு போர் நடந்ததா? என்று கூடத் தெரியாது. மொத்தத்தில் தற்போதைய அரசாங்கம் உட்பட எந்த அரசாங்கமும் படையினரைக் கண்டுகொள்ளவில்லை.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் தேவைக்காக கையகப்படுத்தப்பட்ட சில காணிகள் உள்ளன. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட சில நிலங்களைத் திருப்பித் தரவும் வாய்ப்புள்ளது. ஆனால், அரசியல் நலன் கருதி அந்த நிலங்களைத் திருப்பிக் கொடுப்பதை ஏற்கமுடியாது.

வடக்கு, கிழக்கில் வாக்குகளுக்காக பேராசை கொண்ட சக்திகளை குறைமதிப்புக்கு உட்படுத்தும் மற்றும் தவறான இடத்தில் வைக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது. என்ன ஒரு கோழைத்தனமான செயல். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள். தற்போதைய ஆட்சியே கோழைத்தனமானது. அருவருப்பானது. பலவீனமாக உள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அறிவார்ந்த தலைவர் இந்த நாட்டுக்குத் தேவை - என்றார். (ஒ-இ)

# உலகில் பெரிய சிறுநீரகக்கல் சத்திரசிகிச்சை மூலம் அகற்றம்!

## இலங்கை இராணுவம் கின்னஸ் சாதனை



உலகின் மிகப்பெரிய மற்றும் கனமான சிறுநீரகக் கல்லை சத்திரசிகிச்சை மூலம் அகற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு கின்னஸ் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதியன்று கொழும்பு இராணுவ மருத்துவமனையில் அந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிறுநீரக மருத்துவர், லெப்டினன்ட் கேணல் கே.சுதர்ஷன் தலைமையில் இந்தச் சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்பட்டது. அகற்றப்பட்ட சிறுநீரகக்கல் 13.372 செ.மீ நீளமும் 801 கிராம் எடையும் கொண்டது. (ம)

# தொழில் ஆலோசனைக்குழுவின் பெண் உறுப்பினர் மீது அழுத்தம்

தேசிய தொழில் ஆலோசனை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு பெண் உறுப்பினரான சுவஸ்திகா அருள்லிங்கத்தை பதவி விலகுமாறு பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் ஆராயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தொழிலமைச்சர் மனுஷ நாணயக்கார இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

தேசிய தொழில் ஆலோசனை ஆணைக்குழு அங்கத்தவர்கள் அரசியல் சார்பற்றவர்கள் எந்தக் கட்சியையும் சாராதவர்கள். 2021 ஆம் ஆண்டுவரை தேசிய தொழில் ஆலோசனை ஆணைக்குழுவில் பெண்கள் எவரும் அங்கத்துவம் வகிக்கவில்லல. 2021 ஆம் ஆண்டில் முதல் தடவையாக சட்டத்தரணியும் வர்த்தக கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் தலைவியுமான சுவஸ்திகா அருள்லிங்கம் நியமிக்கப்பட்டார்.

அவரைப் பதவிநீக்குமாறு ஏனைய உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயத்தை ஆராய்வதற்காகவும் பெண்களின் அங்கத்துவம் குறைவாகக் காணப்படுவதற்குரிய காரணம் தொடர்பிலும் கண்டறிய குழுவொன்றை தொழிலமைச்சர் மனுஷ நாணயக்கார நியமித்துள்ளார். (ச-6)

# கரவெட்டி, சண்டிலிப்பாயில் கண்புரை சிகிச்சைத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கரவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் மேற்கொள்ளப்படவுள்ளது. நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இந்த முகாம் இடம்பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு கரவெட்டி பிரதேச மருத்துவமனையிலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நோயாளர்களுக்கு மானிப்பாய் பிரதேச மருத்துவமனையிலும் குறித்த தினத்தில் இந்த முகாம் நடைபெறவுள்ளது.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெரிவு செய்யப்படும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிகிச்சை பெறவந்த பெண் வன்புணர்வு!

## மருத்துவர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

சியம்பலாப்பே பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவ நிலையமொன்றில், சிகிச்சை பெறவந்த பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று மருத்துவர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

பெண்ணின் முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபரான மருத்துவரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். பொலிஸாருக்கு மேலதிகமாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ம)

# வவுனியா தொல்லியல் திணைக்கள துணை ஆணையர் விலகவேண்டும்

## மறவன்புலவு சச்சிதானந்தம் வலியுறுத்து

தொல்லியல் திணைக்களத் தலைவர் விலகியதால் சிக்கல் தீராது, வவுனியா தொல்லியல் திணைக்களத் துணை ஆணையர் பதவிவிலகவேண்டும் என மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இந்து - பௌத்த நல்லிணக்கத்தைக் கெடுத்தவர் வவுனியாத் தொல்லியல் திணைக்களத் துணை ஆணையர் செயதிலகர். சிவசேனையில் உள்ள நாங்கள் கூறுகிறோம், வட மாகாணத்தில் தொல்லியல் திணைக்கள அடாவடித்தனங்களுக்கு வவுனியாத் தொல்லியல் துணை ஆணையர் செயதிலகரே காரணர். சிவசேனையினர் அவரிடம் சென்று முறையிட்டோம். நல்லிணக்கத்துக்கு இடையூறாக இருக்காதீர்கள் எனக் கோரினோம். இந்து - பௌத்த நல்லிணக்கம் உடைந்தாலும் கருதேன் என நேரடியாகவே சிவசேனையிடம் சொன்னார். ஜனாதிபதி உடனடியாக அவரையும் இடமாற்றி விசாரணைகளைத் தொடங்கவேண்டும். ஜனாதிபதியின் இந்து- பௌத்த நல்லிணக்க முயற்சிகளைச் சிவசேனை பாராட்டுகிறது - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மானிப்பாய் - காரைநகர் வீதி உட்பட

# 4 வீதிகளின் திருத்தங்களுக்கு ரூ. 26 மில். முன்னெடுப்பு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

**கடந்த காலத்தில் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட வீதி மறுசீரமைப்பு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நிலையில் தற்போது அந்த வீதிகளை செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் - மானிப்பாய் காரைநகர் வீதி 10 மில்லியன் ரூபா செலவிலும், யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதி 10 மில்லியன் ரூபா செலவிலும், புத்தூர் - சுன்னாகம் வீதி 3 மில்லியன் ரூபா செலவிலும், மாவடி மூன்றாம் வீதி 3 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகளில் பொதுமக்கள் பயணத்தை மேற்கொள்ளக் கூடியவாறு தற்காலிக புனரமைப்புப் பணியே முன்னெடுக்கப்படவுள்ளது. வீதிகளின் முழுமையான மறுசீரமைப்புக்குரிய நிதி கிடைக்கப்பெறும் பொழுது அவை 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படும்.

யாழ். பொன்னாலை - பருத்தித்துறை வீதியில் புனரமைப்புக்குள்ளாகி இடைநிறுத்தப்பட்ட 7 மதகுகளில் 4 மதகுகளின் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதனைப் போல ஏனைய வீதிகளின் மதகுகளும் முழுமையாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (ஓ-5,125)

## சமுர்த்தி நிலையம் மாற்றம்; காட்டுப்புலம் மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 15

சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கும் இடத்தை எமது கிராமத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவுக்கு இடம்மாற்றியதால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளோம் என சுழிபுரம் பாண்டவெட்டை காட்டுப்புலம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

சுழிபுரம் கிழக்கு ஜே/174 கிராம அலுவலர் பிரிவின் சுழிபுரம் பாண்டவெட்டை காட்டுப்புலம் பகுதி மீள் குடியேற்றப் பகுதியாகக் காணப்படுகிறது. சுழிபுரம் கிழக்குப் பிரதான மையப்பகுதியிலிருந்து 3 கிலோமீற்றர் உட்புறமாகக் காணப்படுகிறது.

இதுவரை காலமும் சமுர்த்தி அலுவலர்கள் எமது பகுதிகளுக்கு நேரடியாக வருகைதந்து கொடுப்பனவுகளை வழங்கி வந்தனர். தற்போது சுழிபுரம் வடக்குப் பகுதியிலுள்ள ஆறுமுக வித்தியாசாலைக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அதனால் சுமார் 3 கிலோமீற்றர் ஆள்நடமாற்றம் குறைவாகக் காணப்படும் வெளியூடாக நடந்து சென்றே கொடுப்பனவுகளைப்பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் வயோதிபர்கள் கொடுப்பனவுகளை பெற்றுச்செல்கையில் வழிப்பறிகள் இடம்பெறவும் நேரிடும். அத்துடன் நோய்களால் பாதிக்கப்பட்டோர் வெயில் நேரங்களில் இந்தப் பகுதியூடாக பயணிக்கும் போது உடல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே எமது கிராமத்திலேயே கொடுப்பனவு பெற்றுத் தர உரிய அதிகாரிகள் வழிவகை செய்ய வேண்டும் - என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் சங்கானை பிரதேச செயலரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, "மக்களது நலன்கருதி குறித்த கொடுப்பனவை மீள அதே பகுதியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (ச-125)

## ஓட்டோவில் பயணித்த 11 சிறுவர்கள் காயம்

*கொழும்புத்துறையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் ஓட்டோவொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 11 முன்பள்ளிச் சிறுவர்கள் காயமடைந்தனர். காயமடைந்த சிறுவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, ஒரு ஓட்டோவில் 11 முன்பள்ளிச் சிறுவர்கள் பயணிக்க அனுமதி வழங்கியது யார்? என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-27)

## யுவதி மீது துர்நடத்தை; பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூன் 15

20 வயதான யுவதி ஒருவரைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், பொலிஸ் அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட் இந்த யுவதியின் உறவினர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த யுவதி தனியாக இருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த அவர், யுவதி மீது பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## பெண் அடிமைத்தனம்; கிளி.யில் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 15

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நீதிகோரி கிளிநொச்சியில் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சி கோணாவில் சந்திரமுகி சந்தியில் ஆரம்பித்து கோணாவில் விளையாட்டு மைதானத்தில் நிறைவுற்றது.

'பெண் அடிமைத்தனம் வேண்டாம்', 'பெண்கள் மீது வன்முறையை பிரயோகிக்காதீர்கள்' உள்ளிட்ட வாசகங்களை தாங்கிய பதாகைளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

போராட்டத்தில் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)




**களவுக்குப் போன கழுதை கனைச்சால் கதை கந்தலாப் போடும். அதைமாதிரி ஒரு வேலை செய்து, மாட்டுப்பட்டு இப்ப முழிச்சுக் கொண்டிருக்கிறார் வடக்கில இருக்கிற ஒரு வலயக் கல்விப் பணிப்பாளர். இப்ப ஏ.எல். எக்ஸாம் சம்பந்தமான ஒரு கூட்டம் இந்த வருசம் தை மாதம் கொழும்பில நடந்தது. அந்தக் கூட்டத்துக்குப் போன அதிகாரியளில இந்த வலயப்பணிப்பாளரும் ஒராள். கூட்டத்துக்குப் போனவை இரத்மலானையில உள்ள அரசாங்க குவார்ட்டஸில தான் தங்கி நிண்டிருக்கினம்.**

**இரவில 'செற்றா' நிக்கேக்க, தண்ணிவிடாய் எடுக்கும் தானே. அளவாத் 'தண்ணியைக்' குடிச்சிட்டு கம்மெண்டு படுத்திருந்தால் சோலியில்லை. ஆனால், இந்தக் கல்விப்பணிப்பாளர் 'தண்ணி' ஊத்துறதில தாராள வள்ளல். அதால விடிய விடிய அந்த ரீம் இருந்த ரூமில ஒரே தண்ணியாறு மகாவலி மாதிரி ஓடிக்கொண்டேயிருந்திருக்கு. தண்ணிக்க கனநேரம் ஊறினால், என்ன செய்யும்? உடம்பு வெடவெடக்கும், குரல் தளதளக்கும், கண்ணீர்க்கடல் பெருக்கெடும், சிரிப்பலை சிறகடிக்கும், பழைய கதையெல்லாம் பாய்விரிச்சுப் படுக்கும், பாடாத வாயெல்லாம் பாலசுப்பிரணியமா மாறும். இதில ஒண்டுக்கும் அந்த ரூமில அண்டைக்குப் பஞ்சமிருக்கேலையாம். அதோட அந்தக் குவார்ட்டஸில 'சிப்போர்ட்டால' தான் அறையளைப் பிரிச்சிருக்கு. இவைக்கு சுதி கூடினவுடன அந்த 'சிப்போட்டுகளில' தாளம் தட்டி, பக்கத்து ரூமில இருக்கிறவைக்கும் திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கினம். கடைசியா எல்லாரும் பிள்ளைத்தாச்சிப் பொம்பிளையள் மாதிரி சாப்பிட்டது, குடிச்சதெல்லாத்தையும் அந்த ரூமுக்குள்ளையே 'குவாக் குவாக்' எண்டு 'ஒம்லெட்' போட்டிட்டு படுத்திட்டினம். விடிய எழும்பின பிறகுதான், அவைக்கு சுயநினைவு வந்து, எல்லாத்தையும் கிளீன் பண்ணிட்டு, நல்லபிள்ளையள் மாதிரி வந்திருக்கினம். ஆனால், 'அரசன் அன்று கொல்வான், 'ஒம்லெட்' நின்று கொல்லும்' கண்டியளோ. அப்ப போட்ட 'ஒம்லெட்' இப்பதான் அவருக்கு அலுவலைக் குடுக்குதாம்.**

**அந்தக் குவார்ட்டஸில பக்கத்து ரூமில இருந்தவை இதைப் பற்றிச் சொல்லவேண்டிய ஆக்களிட்ட முறைப்பாடு குடுத்திருக்கினம். அதுக்குப் பிறகு இந்த 'ஒம்லெட்' போட்ட விசயத்தை விசாரிக்கச் சொல்லி, பிரதம செயலாளர் அலுவலகத்தில இருந்து வடக்குக் கல்விப்பணிப்பாளருக்கு உத்தரவு பறந்திருக்கு. இந்த விசாரணை முடியும் மட்டும், 'ஒம்லெட்' போட்ட வலயக் கல்விப்பணிப்பாளரும், அவரின்ர கூட்டாளி அதிகாரியளும் இரத்மலானைக் குவார்ட்டஸில தங்கவே கூடாது எண்டும், விசாரணையில இவையள் குற்றவாளியள் எண்டால் கடும் நடவடிக்கை எடுக்கச் சொல்லியும் மேலிடத்தில இருந்து ஓடர் வந்திருக்காம். குடியும் கும்மாளமுமாய் இருந்த வலயப்பணிப்பாளர் இப்ப கொஞ்சம் அடக்க ஒடுக்கமாம். 'தண்ணியில கண்டம்' எண்டுறது இதைத்தானோ?**



- பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 15
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. பரிபாலனசபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவைச் சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் "வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை" என்னும் தொனிப் பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

படங்கள்: சிவசாந்தன்





வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கும்பாபிஷேக தினமாகிய நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முருகப்பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்று முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சகிதம் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார். (ச)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு - பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)

## ஊவா பல்கலையில் மலைத்தென்றல் விழா

### கருத்தாடலில் யாழ்.பல்கலை இரண்டாமிடம்

கண்டி, ஜூன் 15
ஊவா வெல்லஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தால் தமிழ்மொழியை சிறப்பிக்கும் வகையில் வருடாவருடம் முன்னெடுக்கப்படும் மலைத்தென்றல் விழா இந்த வருடமும் சிறப்புற கொண்டாடப்பட்டது.
சிறப்பு நிகழ்வாக இலங்கையின் அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கருத்தாடல் போட்டி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.
பாடசாலை மாணவர்களுக்கான கவிதை மற்றும் புத்தாக்கப் போட்டிகளும் திறந்த பிரிவில் புத்தாக்கப் போட்டிகளும் முன்னெடுக்கப்பட்டன.
அனைத்துப் பல்கலைக்கழகங்கள் சார்பாக சுமார் 24 குழுக்கள் கலந்துகொண்ட நிலையில் மொறட்டுவ பல்கலைக்கழகம் முதலாமிடத்தையும் யாழ். பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுகொண்டன. (ச-125)

## ஈழத்தமிழ்ச் சிறுகதைகள் மாதாந்த ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15
தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத்தமிழ்ச் சிறுகதைகள்' எனும் தலைப்பிலான மாதாந்த ஆய்வரங்குத் தொடரின் 5ஆவது நிகழ்வு இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், ஆய்வாளரும் எழுத்தாளருமான சி.ரமேஷ் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார்.
தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)





பிரசித்திபெற்ற பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் திருச்சொரூப தேர்ப்பவனி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது. (ச-17)

## சனசமூக நிலைய ஆண்டு நிறைவு

சாவகச்சேரி, ஜூன் 15
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
நிலையத் தலைவர் சு.சுதாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், சாவகச்சேரி மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி. சிவசுதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-9)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் சாதகமாகும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். விநாயகரை வழிபடுவது நலம் தரும். கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றை எடுப்பீர்கள்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. முயற்சி செய்யவும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விடுதலையா? சாபமா?

'கண்ணை மூடுவதற்கு முன்னர் என் பிள்ளையை விடுவியுங்கள்' என்று உருக்கமான கோரிக்கை ஒன்றை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விடுத்துள்ளார் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் கைதாகி விடுதலை பெற்றுள்ளதாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட சாந்தனின் தாயார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன், ராஜீவ் கொலை வழக்கில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டு, 32 வருடங்கள் சிறைப்பறவையாக இருந்து, நெடிய போராட்டத்தின் பின்னர் கடந்த வருடம் விடுவிக்கப்பட்டிருந்தார். இவரோடு சிறைவாசிகளாக இருந்த பேரறிவாளன், நளினி போன்றோர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் விடுதலைத் தீர்ப்பு வந்ததுமே தத்தம் குடும்பங்களோடு இணைந்துவிட்டார்கள். ஆனால், ராஜீவ் கொலை வழக்கில் சிக்கிய இலங்கையர்களான சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரும் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்தவர்களாக, விடுதலையென்னும் வரமே சாபமாகிப் போனவர்களாக அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் சிறையில் இருந்த போது, சுவர்களால் அடைக்கப்பட்ட பரந்த வெளிக்குள் கொஞ்சமேனும் நடமாட முடிந்தது. ஆனால், இப்போது சிறப்புமுகாம் என்ற பெயரில் அவர்கள் மிகக்குறுகிய அறைகளுக்குள் அடைக்கப்பட்டு, அதற்குள்ளேயே அவர்களின் சகல வாழ்வியக்கங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு குறுகிய அறைக்குள்ளேதான் நிற்பது, இருப்பது, சமைப்பது, உண்பது, உறங்குவது, இயற்கைக்கடன் கழிப்பது என்று அவர்களின் நடமாட்டம் சுருக்கப்பட்டுள்ளது. அந்த அறையைத் தாண்டி வெளியே செல்ல அனுமதியில்லை. வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. உறவினர்கள் சென்று சந்திக்கவும் ஆயிரம் கெடுபிடிகள். 'இந்த விடுதலையைவிடவும் சிறைவாசம் எவ்வளவோ மேல்' என்று அந்த நால்வரும் மனம் வெதும்புமளவுக்கு, உளவியல்ரீதியான நெருக்குதல்களுக்கு ஆளாகியுள்ளனர். இந்தநிலையில்தான், தன்னை இலங்கை செல்ல அனுமதிக்குமாறு சாந்தன் இந்தியப்பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார். அதன் நீட்சியாக, 32 வருடங்களாகத் தன்னை விட்டுப் பிரிந்திருந்த மகனை, தான் உயிர் துறக்க முன்னராவது கண்ணாரக் கண்டுமகிழக் கருணை காட்டுமாறு இந்தியப் பிரதமர் மோடியிடம் ஒரு கோரிக்கையை சாந்தனின் தாயார் முன்வைத்துள்ளார்.

உண்மையில், இலங்கையர் நால்வரையும் அவர்கள் விடுதலையான மறுநொடியே இலங்கைக்கு இந்தியா நாடுகடத்தியிருக்கவேண்டும். அதுவே உலகெங்கும் பின்பற்றப்படும் சட்ட நடைமுறை. ஏனெனில், சாந்தன் உள்ளிட்ட நால்வரும் இப்போது குற்றவாளிகள் அல்லர். அத்தோடு இந்தியாவில் வசிக்கும் வகையிலான எவ்வித ஆவணங்களைக் கொண்டிருப்பவர்களும் அல்லர். கூடவே இந்தியாவில் இருக்கப்போகிறோம் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கவுமில்லை. எனவே, அவர்களை தன் நாட்டில் அறைச்சிறைக்குள் வைப்பதற்கான எந்த முகாந்திரமும் இந்தியாவுக்கு இல்லை. ஆயினும், அவர்களை அனுப்ப இந்தியா ஏனோ பின்னடிக்கின்றது. அவர்கள் ஈழத்தமிழர்கள் என்பதால், அவர்களின் விடுதலைக்காக எவரும் குரல் கொடுக்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் தான் இப்படி விடுதலைக்குப் பிறகும் தண்டனை கொடுக்கும் கைங்கரியத்தை இந்தியா முன்னெடுக்கிறது. தமது வாழ்வின் பெரும்பகுதியை – இளமைக்காலத்தை – சிறைக்குள் தொலைத்துவிட்டு, எஞ்சிய காலத்தையாவது குடும்பத்தோடு கழிக்க நினைப்பவர்களை இனியும் சிறைக்குள் வாடவைப்பதைவிட வஞ்சனை ஏதுமில்லை. விடுதலைக்குப் பின்னும் சிறையிருக்கும் இலங்கையர் நால்வருக்காகவும் இனியாவது தமிழகத் தலைவர்களும், இலங்கையிலுள்ள தமிழ் அரசியல்வாதிகளும், புலம்பெயர் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் தொடர்ந்து குரல் கொடுக்கவேண்டும். அப்போதாவது இந்தியா மனமிளகி, இலங்கையர் நால்வருக்கும் விமோசனம் கிட்டாதா?

நாளொரு நல்வார்த்தை

"மனிதனுடைய இதயத்தைத் திறப்பது எது? அவனை அறியாமல் எழும் சிரிப்புத்தான்"

– கார்லைல்




# 'சிங்களம் மாத்திரம்' எனக்கூறி நாட்டை மீட்பதற்கு முடியாது!

## சஜித் வெளிப்படைப் பேச்சு

**கொழும்பு, ஜூன் 15**

**'சிங்களம் மாத்திரம், சிங்களம் மாத்திரம்' எனக் கூறி இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள முடியாது. நாம் புதிய வழியில் சிந்திக்கவேண்டும். நாம் இனியும் குறுகிய மனப்பாங்கில் சிந்திக்க முடியாது - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு அறிவின் மையமாக மாறும் என பல்வேறு தரப்பினர் கூறினாலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அதனைப் பலரும் மறந்துவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியிலிருந்தும் எமது நாட்டை அறிவு மைய நாடாக மாற்றுவதற்கான அடிப்படை அடித்தளத்தை அமைத்து வருகின்றது. நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி மட்டுமின்றி சுகாதாரமும் ஒரு காரணம் என்பதால் எதிர்க்கட்சி இதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு கொண்டு வந்து, சுகாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறித்த நிதியை பயன்படுத்தி அத்துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அறிவை அடிப்படையாகக் கொள்ளாத, உண்மைக்குப்புறம்பாக மக்களை ஏமாற்றும் ஆட்சித் தீர்மானங்களால் முன்னைய அரசாங்கம் எமது நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றது. உலக தொழில் சந்தைக்கு ஏற்ப மனித வளங்களை எம்மால் வழங்க முடியுமான நிலைக்கு எமது நாடு முன்னகர வேண்டும். சிங்களம் மாத்திரம் போன்ற போலியான தேசியவாத பரப்புரைகளை விடுத்து யதார்த்தமாக இது குறித்து நோக்காவிட்டால் எம்மால் ஒரு நாடாக தலை தூக்க முடியாது - என்றார்.

(ம-இ)

# சார்க் சுற்றுலாவிகளுக்கு இலவச விசா அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 15

பொருளாதார ரீதியில் வளர்ச்சியை எட்டுவதற்கு சார்க் நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டணமின்றி இலவச விசா வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தீமானித்துள்ளது.

இதுதொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவிக்கையில்,

தற்போது விசாக் கட்டணமாக 20 டொலர் அறவிடப்படுகிறது. இலவச விசா அறிமுகப் படுத்தப்படும் பட்சத்தில் சுற்றுலாப் பயணிகள், முதலீட்டாளர்களின் வருகையை அதிகரிக்கச் செய்வதுடன் பொருளாதார ரீதியாகப் பல நன்மைகளைப் பெறமுடியும்.

இந்த இலவச விசாவை இலத்திரனியல் பயண அனுமதிக்கு விண்ணப்பிப்பதன் மூலம் ஒன்லைன் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம். முதலில் முப்பது நாள்களுக்கு விசா வழங்கப்படும் பின்னர் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படும். இந்த இலவச விசாத் திட்டத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் பட்சத்தில், சுற்றுலாத்துறையின் இணை சேவைகளான விருந்தோம்பல், போக்குவரத்து, சில்லறை விற்பனை மற்றும் பொழுதுபோக்கு என்பனவும் வளர்ச்சியடையும். அத்துடன் புதிய தொழில் வாய்ப்புகளும் உருவாகும் - என்றார்.

(ச-6)

நாளை 16.06.2023 வெள்ளிக்கிழமை ஆனி 01

சுபநேரம் : 05.53 - 07.23

ராகுகாலம் : 10.23 - 11.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தம் நிறைவடைந்தமையாலேயே பதவி விலகினாராம் பணிப்பாளர்

## பூசி மெழுகினார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 15

**தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்கவின் ஒப்பந்தகாலம் நிறைவடைந்ததன் அடிப்படையிலேயே அவர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார். இந்தக்கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்த தாவது:-

தொல்பொருள் தொடர்பில் வடக்கு, கிழக்கில் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் எவ்வித தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவில்லை. எனினும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்தினார். தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் களனிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் என்பதால் ஒப்பந்த அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கே தொல்லியல் திணைக்களத்துக்கு நியமனம் பெற்றிருந்தார். அதன் பின்னர் அவரது ஒப்பந்த காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீண்டும் பேராசிரியராக தனது பணிகளை அவர் ஆரம்பிக்க வேண்டுமென்பதால் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து விலகுவதாகக் குறிப்பிட்டு அவர் தனது பதவிவிலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் என்று அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார் - என்றார். (அ-ம-44)

# ஆட்சியைத் தீர்மானிப்பது பொதுஜன பெரமுனவே

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் வல்லமை சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கே உண்டு என்று அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதில் பொதுஜன பெரமுன கட்சியே வெற்றி பெறும். பொதுஜன பெரமுனவுக்கே மக்கள் ஆணை வழங்கினர். அந்த ஆணையைப் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம். பொதுஜன பெரமுன என்ற இடதுசாரி அரசியல் சக்தியைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் இருந்தது. மக்கள் ஆணையைக் காட்டிக்கொடுக்கும் வகையில் ஒருபோதும் செயற்படமாட்டோம் - என்றார். (ஒ-22)

# தேர்தல் அவசியம் மைத்திரி கருத்து

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் தேர்தல் ஒன்று மிகவும் அவசியம் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியினராக மக்களே உள்ளனர் என்றும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி அரசியல் கட்சிகளுக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மக்கள் ஆணை இன்றி எவரும் ஆட்சியமைக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயார் என்றும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ஒ-22)

# தனியார் பஸ்கள் மீது இறுக்கமான நடவடிக்கை

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

தனியார் பஸ் உரிமையாளர்கள் போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறிச் செயற்படும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை காணப்படுவதாக போக்கு வரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் பஸ் போக்குவரத்து தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அரசியல்வாதிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள், சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்கள், இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் போன்றோர் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துகின்றனர். தான்தோன்றித்தனமான இடங்களில் பேருந்துகளை நிறுத்தி பிரயாணிகளை ஏற்றி இறக்குதல், வேகக் கட்டுப்பாடின்மை, வழி அனுமதிப்பத்திரம் பெறாது சேவையில் ஈடுபடுதல், தற்காலிக வழி அனுமதிப்பத்திரத்துடன் சேவையில் ஈடுபடுதல் போன்ற குற்றச்சாட்டுகள் தனியார் பஸ்கள் மீது சுமத்தப்படுகின்றன. இவ்வாறான விதிமீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக இனிவரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். கேள்விப்பத்திரம் மூலம் வழி அனுமதிப்பத்திரம் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-6)

# அங்கீகாரம் வழங்காவிட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம்

## பெரமுனவினர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்களுக்குரிய அங்கீகாரம் இல்லாவிட்டால் அரசில் இருந்து வெளியேறுவோம் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

'குடுக்காரர்கள் மற்றும் தெருச் சண்டியர்களுக்கு அஞ்சி ஒளியும் நபர்கள் நாங்கள் கிடையாது. அத்துடன், எங்கள் வாக்குகளால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

அவர் ஜனாதிபதியான பின்னர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கொக்கரிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதிகமாகத் துள்ளவேண்டாம் என அவர்களை எச்சரிக்கின்றோம். பொதுஜன பெரமுனவுக்காக உழைத்தவர்கள்தான் கட்சியின் மாவட்டத் தலைவர்கள். அவர்களுக்குரிய இடமில்லையேல், அப்படியானதொரு அரசில் இருக்கவேண்டியதில்லை - என்றார். (அ-ம-44)

# ரணில் - மொட்டு உறவு சிதைவு

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

ரணில் - மொட்டு உறவு சிதைவடைந்து விட்டது. அதனால் அவர்கள் தலைமையிலான அரசும் செயலிழந்து விட்டது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் ஆணையை இந்த அரசு ஏற்கனவே இழந்துள்ள நிலையில், செத்த பிணமாகவே ஆட்சி தொடர்ந்தது. அதுவும் இப்போது முடிவுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியினர் சிறிதளவும் மதிக்கின்றார்கள் இல்லை. அதனால்தான் அவர் தலைமையிலான கூட்டத்தை மொட்டின் மூத்த உறுப்பினர்கள் கூடப் புறக்கணித்துள்ளனர்.

இது ஜனாதிபதிக்கு வெட்கக்கேடு.

எனவே, மக்கள் ஆணை உள்ள அரசை நிறுவ வேண்டுமெனில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்தவேண்டும் - என்றார். (ஒ-22)

## வெளிநாட்டு மாணவர்களைக் கவரும் வகையில்

# பல்கலைக்கழக முறைமையை மாற்றியமைக்க வேண்டும்!

கொழும்பு, ஜூன் 15

வெளிநாட்டு மாணவர்களைக் கவரக்கூடிய விதத்தில், இலங்கையின் பல்கலைக்கழக முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கான விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு மாணவர்களைக் கவரக்கூடிய விதத்தில் சர்வதேசத்தரம் வாய்ந்ததாக, சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்படக்கூடியதாக பல்கலைக்கழக கல்வி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இது நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தை பின்பற்றியே பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று என்ன நடக்கிறது? துணைவேந்தர்கள் தாக்கப்படுகின்றனர். விரிவுரை மண்டபங்கள் உள்ளன. ஆனால், விரிவுரையாளர்கள் இல்லை. முன்னைய காலங்களில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காதவர்கள் தான் வெளிநாடு சென்றார்கள், இன்று வெளிநாடுதான் மாணவர்களின் முதல் தெரிவாகக் காணப்படுகிறது.

இந்தப் பிரச்சினைகள் யாவற்றுக்கும் தீர்வு காணப்படவேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கென நான் ஓர் அமைச்சரவை உபகுழுவை நியமித்துள்ளேன் - என்றார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 90 ரூபாய்

077 334 1281


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## பளைநகர பேரூந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல - 05 நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15.06.2023 தொடக்கம் 30.06.2023 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 30.06.2023 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.06.2023 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 516,000.00 | 51,600.00 | 2,000.00 |

**நியந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.(வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 30.06.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரச உத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி.த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

15.06.2023.

## மரண அறிவித்தல்



திருமதி.
## வசந்தாதேவி(தவம்) ராம்குமார்

**அன்னை மடியில் : 02 . 11 . 1944**
**இறைவன் அடியில் : 12 . 06 . 2023**

தீருவில் வல்வெட்டிதுறையைப் பிறப்பிடமாகவும்,குச்சம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. வசந்தாதேவி (தவம்) ராம்குமார் (பாலா) அவர்கள் 12.06.2023 திங்கட் கிழமை அன்று இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமா முகப்பெருமாள்,தெய்வநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற அருளம்பலம், கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும்,ராம்குமாரின் ஆருயிர்த் துணைவியும்,இரத்தினவேல்,ஜெயமணிதேவி,தவராசா, வனிதாதேவி,ரவிக்குமார்,ரவிச்சந்திரன்,கோமதி,காலஞ்சென்ற சிவா ஆகியோரின் பாசமிகு தமக்கையாரும், கலைவாணி, லோகேஸ்வரி, சத்தியகுமார், ஜெயரூபவதனி,சுஜிதா ஆகியோரின் அருமைத் தாயாரும், கருணானந்தன், பாலச்சந்திரன், சசிகலா, ஐதீஸ், நிஷாந்தன் ஆகியோரின் அன்பான மாமியாரும், மேனகா, ராதிகா, செந்தூரன், ஹரணி,ராகன், ஆருஷன், கிருஷ்ணா, லேகா ஆகியோரின் அன்புக்குரிய பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15.06.2023 இன்று விொழக்கிழமை காலை 10 மணி முதல் கல்கிசை மகிந்த ஈமச்சடங்கு மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3 மணியளவில் இந்து சமய ஆசார முறைப்படி நடைபெறும் ஈமக்கிரியைகளைத் தொடர்ந்து, மாலை 4 மணியளவில் தெஹிவளை-கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : ராம்குமார் +94 76 471 4600, சத்தியகுமார் + 44 7720 887759
கருணானந்தன் ( மருமகன் ) + 44 7757 2354 88, + 44 2085 782 775

## மரண அறிவித்தல்



## தனபாலசிங்கம் ஞானபானு

(சமாதான நீதிவான், பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் சங்கானை.)

தோற்றம் 21.11.1958
மறைவு 13.06.2023

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வல்லை வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் ஞானபானு கடந்த (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா மகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகளும், கந்தையா தனபாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், துர்க்கா, நிஷாந்தன், நிரோஜன், சர்மிலன் விதுசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்திரு, பிரகாஸ் சுடர், கதிர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2023) வியாழக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேசவில்லா
வல்லை வீதி, சங்கானை
021 225 0320
077 165 0634

தகவல்:
குடும்பத்தினர்

(CS 24272) (K-1)

## மரண அறிவித்தல்

## சிவராசா விக்கினேஸ்வரி

தோற்றம் : 24.05.1949 மறைவு : 14.06.2023



உரும்பிராயை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா விக்கினேஸ்வரி நேற்று (14.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னலஷ்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், மகாலட்சுமி, சுகிர்தராணி, புவனேஸ்வரி, ரவீந்திரன், காலஞ்சென்ற குபேந்திரன் மற்றும் கமலராணி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசா அவர்களின் அன்பு மனைவியும், சுஜாதா (லண்டன்), ரமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபேசன் (லண்டன்), சங்கீர்த்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷான், லோஷான் (லண்டன்), ஜதுசன், நயனிதா , கயானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2023) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் பழம்பெரும் விநாயகர் தலங்களில் ஒன்றான சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய திருப்பணி வேலைகள் துரித கதியில் பூர்த்தியாகி விரைவில் குடமுழுக்கு நடைபெறவுள்ளது. (ய-125)

# வவு. பழைய பஸ்நிலையத்திலும் பேருந்துகள் தரித்துச் செல்லும்

## கலந்தாய்வில் தீர்மானம்

**வவுனியா, ஜூன் 15**

**வவுனியாவில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகள் இனிவரும் காலங்களில் பழைய பேருந்து நிலையம் வரை சென்று ஐந்து நிமிடங்கள் தரித்துச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா நகரில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலர் தலைமையில் கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.



கலந்துரையாடலில் பேருந்து நிலையம் வரை உள்ளூர்ப் பேருந்துசேவைகளை நடத்துமாறு வர்த்தக சங்கத்தினர் கோரினர். குறிப்பாக அந்தப் பகுதியில் வியாபார நிலையங்கள் அதிகளவில் உள்ளதால் பொதுமக்கள் அங்கு வந்து செல்வதிலுள்ள சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக இந்தவிடயத்தில் கரிசனை கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்தவிடயம் தொடர்பில் அரச, தனியார் பேருந்துத் தரப்பினரிடமும் கருத்துக் கோரிய நிலையில், பழைய பேருந்து நிலையம் வரை சென்று சேவையில் ஈடுபடுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து இந்தவிடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுசென்று நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

(ச-110)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தெல்லிப்பழை தோதரவையம்பதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகளுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், விசேட பூசை, மகேஸ்வர பூசை என்பன நடைபெறும். அன்றையதினம் மாலை 6 மணிக்கு திருவூஞ்சலைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறுமென மேற்படி ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ கி.கணேசமூர்த்தி சர்மா அறிவித்துள்ளார். (ய-66)

## வடக்கில் கறுவாச் செய்கை; 2 ஆம் கட்டச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 2ஆம் கட்டச் செயலமர்வு மருதனார்மடம் - உரும்பிராய் பிரதான வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் கலாநிதி ஜெயசிங்க பிரதம அதிதியாகப் பங்கேற்று, வடக்கில் கறுவாச் செய்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவான விளக்கவுரையாற்றவுள்ளார்.

அத்துடன் கறுவா ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளும் பங்கேற்று பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு 0770629013 என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர் புவனகுமார் தெரிவித்துள்ளார்.

(ச-இ)


# சேவை நலன் பாராட்டு வாழ்த்து

## யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்





Congratulations
Best Wishes

**திருமதி புஸ்பராணி சிவபாலன்** (B.A, Dip.in Edu.)
உப அதிபர்

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை | 22.03.1990 - 01.02.2015 |
| யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 02.02.2015 - 05.05.2015 |
| யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | 06.05.2015 - 31.12.2022 |

**திருமதி கேமாவதி அற்புதரவி** (B.A, Dip.in Edu.)
பகுதித்தலைவர் - ஆரம்பக் கல்வி

**சேவை விபரம்**

| | |
|---|---|
| கிளி / கறுக்காய்த்தீவு அ.த.க.பா | 25.11.1989 - 31.01.1992 |
| கிளி/ செல்லியாதீவு அ.த.க.பா | 01.02.1992 - 31.12.1995 |
| யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பா | 01.01.1996 - 31.12.2003 |
| யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி | 01.01.2004 - 31.12.2010 |
| யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | 01.01.2011 - 31.12.2022 |

**வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்**
**யா/ மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்**

(CR 40129) (K-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 03.12.1931



மறைவு 14.06.2023

## அம்பலவாணர் தம்பிராசா (சாரதி)

அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தம்பிராசா நேற்று (14.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் செல்லம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (செல்லமணி), முத்தையா மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற குலமணியின் அன்புக் கணவரும், நடராசா, மோகனராசா, சூரியபாலன், சந்திரபாலன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, குலேந்திரவதி காலஞ்சென்ற சண்முகவடிவேல் ஆகியோரின் மைத்துனரும், விமலா, லோகராணி, யசோ, வினோ ஆகியோரின் மாமனும், பாமி, பானு, சாஜ், டினோஜா, டினிசன், சுபசிறி, மீனுகா, கென்சிகா, தனுசன், சுனித்தா, கீர்த்திகா, நித்தியா, ஜோதி, அனித்தா, கஜி ஆகியோரின் பேரனும், நிவினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
0770752313, 0776184602, 0764452066

தகவல்:
நடராஜா குடும்பம்.
(கனடா)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14.09.1948



மறைவு 12.06.2023

## செல்வம் தனலட்சுமி (தனம்)

கம்பகாவைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோயிலடி, கும்பப்பிள்ளை, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வம் தனலட்சுமி (தனம்) கடந்த (12.06.2023) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வத்தின் அன்பு மனைவியும், உதயகுமார், தர்மகுமரன், புவனகுமாரி, தவகுமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவர்ணா, ஜெயதர்சினி, ராஜகோபால், சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சுதுமலை வடக்கு, மானிப்பாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்
071 096 8676
077 345 4938

(cs.50843) (N - 1)

ஓம் வீராட் விஸ்வப்பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.01.1932

மறைவு 13.06.2023

## திருமதி இராசையா தங்கரத்தினம்

யாழ்ப்பாணம் நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இராசையா தங்கரத்தினம் அவர்கள் கடந்த (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா பொன்னம்மா தம்பதி யினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையா (ஓய்வுநிலை தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, செல்லத்துரை, தெய்வானைப்பிள்ளை, கதிரவேலு மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோகரன் (ஆசிரியர், கனடா), சியாமளாதேவி (ஆசிரியை - கனடா), ரஞ்சித்குமார் (கனடா), வரதராஜன் (கனடா), வசந்தகுமார் (பொறியியலாளர்- கடனா), லலிதா, நந்தகுமார் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், இரஞ்சினிதேவி, ஜெயராஜா, லோகராணி, கௌரி, ஜெயமாலா, மகேந்திரன், வினோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமினி, அனந்தினி, மயூரினி, சங்கீதா, கீதவாணி, சிந்துஜா, சுஜீவன், விதூஷிகா, மனுதிஷா, யதுசன், பிறீனா, நிதர்சனா, சாகித்யா, திரிஷன், கரிசன், லபிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தனுராம் சேயோன், நயனி, ஜான்வி, ஆரவ், பிறீஷா, சயானா, சஸ்வின், சச்சின், செரீனா, யுகான், தாமரை ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2023) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சீயாக்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

... 7571
... 077 820 9072

தகவல்:
குடும்பத்தினர்

(CS 50841 (K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களிடமிருந்து எங்களைக் காக்கவேண்டும்!

## யாழ். மாவட்ட மீனவர்கள் பிரதமர் மோடிக்கு மனு

**யாழ்ப்பாணம், ஜூன் 15**

**இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் இருந்து வடக்குக் கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு இந்தியப் பிரதமர் மோடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரைச் சந்தித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கலந்துரையாடினர்.

இதன்போதே அவர்கள் இந்தியப் பிரதமர் மோடிக்கு மனுவொன்றையும் கையளித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதி அ.அன்னராசா தெரிவித்ததாவது:

இந்தியாவில் மீனவர்களுடைய மீன்பிடித் தடைக்காலம் இன்று நிறைவடைகின்ற நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியத் துணைத்தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, தீவகக் கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பான நடவடிக்கைகள் வெளிப்படையாக இடம்பெறுகின்றன.

டொலர் வருகிறது, ஏற்றுமதி இடம்பெறுகிறது என்பதற்காக அரசாங்கம் சட்டவிரோதமான தொழிலை கனகச்சிதமாக அனுமதிக்கிறது. கடற்றொழிலில் இருந்து வடக்குக் கடற்றொழிலாளர்களை அந்நியப்படுத்தும் முயற்சி தற்போது இடம்பெற்று வருகின்றது. சீனக் கடலட்டைப் பண்ணைகளால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சட்டவிரோதமான தொழில் மற்றும் சீனக் கடலட்டைப் பண்ணை விவகாரங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஆறுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களும் மூன்று கடற்றொழிலாளர் சமாசங்களும் இணைந்து இந்தியத் தூதரகத்தின் வாயிலாக இந்தியப் பிரதமர் மோடிக்கு மனு வழங்கியுள்ளோம் - என்றார்.

(அ-ம-125)

## சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம் -மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதியில் கிணறொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். அதேபகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரன் தேவராஜா (வயது -45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இறப்பு விசாரணைகளை இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

(ச-27)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், முழங்காவில் ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன்/ கூலியாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. நாள்/ கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

**077 712 0945**

## Immediate Vacancies

Sarukaya Construction (Pvt) Ltd, is a CIDA C4 Graded construction company with over 12 years Experiences, engaged in Building & Water supply project in Northern province.



- Technical Officer (civil)
  HNDE(Civil), NCT (Civil/QS) or Equivalent
  (3 Years Experience in Building Projects.)
- Draughtsman
  NVQ Level 4
  (3D Drawing and Quantity surveying knowledge will be added advantage)

Please forward your CV with details to vacancynsc@gmail.com with two non related referees in 7 Days.

**Sarukaya Construction (Pvt) Ltd.**
No.69 Crossette Lane, Nallur, Jaffna.


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**சின்னத்துரை கந்தசாமி**
மண்ணில் 29.06.1942 விண்ணில் 04.05.2023

அமரர்
**சிவமலர் கந்தசாமி**
மண்ணில் 15.07.1945 விண்ணில் 16.05.2023

"வாழ்வில் ஈருயிர் ஒருடலாய் வாழ்ந்து இணைபிரியாது பிரிவிலும் ஒன்றாய் எம்மை விட்டு புன்னகை பூத்த மலர்களாய் புவியை விட்டு அகன்றீர்களே"

கடந்த 04.05.2023 அன்று இயற்கை எய்திய **அமரர் சின்னத்துரை கந்தசாமி**, கடந்த 16.05.2023 அன்று இயற்கை எய்திய **அமரர் சிவமலர் கந்தசாமி**

ஆகியோரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


**74/1B, திருச்செல்வம் வீதி, கோண்டாவில். (ராஜா பிளாஷா பின்புறம்)**

**குடும்பத்தினர்.**

(CS 25237) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 07 • 1946



மறைவு 14 • 06 • 2023

### குட்டித்தம்பி சிவசுப்பிரமணியம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் முழங்காவில், வேலணை மேற்கு 8ம் வட்டாரம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (14.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், மேகனா காந்தியின் அன்புக் கணவரும், சசிகுமார் (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்), சுகுமார், சகிலா, சசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஜனி (லண்டன்), மகிந்தினி, கயநிசா, கஜரூபன், மயூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜந் (லண்டன்), அகானா (லண்டன்), தனுஷ், சஹானா, சயந், ஆகாஷ், லகிஷா, அக்சரா, ஆதுஷன், சஞ்ஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிவராஜதுரை, காலஞ்சென்ற சிவனேஸ்வரி, சிவஞானபிரகாசம், சிவபாதன் (பாலன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லம்மா (கனடா), றங்கநாதன், நந்தினிதேவி, நவரட்ணராஜா, நிர்மலகாந்தி, வசந்தன், சறோஜினிதேவி, சிவகுமார், ஜெயகுமார், விஷ்னுகாந்தி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற றுக்குமணி, சந்திரலிங்கம், நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சாந்தினி, ஜெயபிரியா, பாலசேகரம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலணை மேற்கு, 8ம் வட்டாரம்.** **077 470 4527**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவபாலு

**தோற்றம் : 04.03.1960** **மறைவு : 14.06.2023**



மீசாலை மேற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாலு நேற்று (14.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா காசிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், ஐயம்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜந்தினி, கோகிலன், பருதிநிலா, பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சக்திதாஸனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2023)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 748 2603** **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீரென தீப்பிடித்த மோட்டார் சைக்கிள்

முல்லைத்தீவு, ஜூன் 15
வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென வெடித்து தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் நேற்று மதியம் நடந்துள்ளது.
ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள் ஒன்றே தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும், மகனும் பாதிப்புக்கள் இன்றி தப்பியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது என்றும், அதன்பின்னர் மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-19)

### காணி...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம், சாவகச்சேரியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அமைச்சர் விதுர விக்ரமநாயக்க வடக்கு - கிழக்குக்குப் பெரும் இராணுவப் பட்டாளத்துடன் வந்து செல்கின்றார். அவரது பணிப்புரையின் கீழ்தான் காணி அபகரிப்புக்கள் நடக்கின்றன.
தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அநுர மானதுங்க பதவி விலகியமை தொடர்பாகக் கடந்த சில தினங்களாக வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. ஜனாதிபதி எங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதும், அமைச்சரவைத் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் விருப்பம் இல்லாதவர் போன்றே பேராசிரியர் மானதுங்க காட்டிக்கொண்டார்.
அது அமைச்சரவைக்கும், அவருக்கும் உள்ள பிரச்சினை. எமக்குள்ள பிரச்சினை வடக்கு - கிழக்கு மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவது தொடர்பானது. அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் பணிப்புரையின் கீழேயே இந்தக் காணி அபகரிப்புகள் நடைபெறுகின்றன. அதனால் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவைப் பதவி விலக்கவேண்டும் என்று நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்துகின்றோம் - என்றார். (அ-எ-27)

### மக்களின்...

என்று யாழ். மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
யாழ். மாவட்டத்தின் 30 ஆவது இராணுவத் தளபதியாக சுஜீவ ஹெட்டியாராச்சி கடந்த 12ஆம் திகதி பலாலியிலுள்ள படைத் தலைமையகத்தில் பதவியேற்றிருந்தார்.
வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாகவிகாரையின் விகாராதிபதி சிறி விமலதேரர், வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரை மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராச்சி சம்பிரதாயபூர்வமாக நேற்றுப் புதன்கிழமை சந்தித்தார்.
யாழ். மாவட்டச் செயலருடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கட்டளைத் தளபதி, மக்களின் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்படும் காணிகளில் வீடமைப்பை மேற்கொள்ள இராணுவம் உதவி செய்யும். வீடுகளை அமைப்பதற்குத் தேவையான ஆளணிகளை எம்மால் வழங்கமுடியும். 700 வீடுகள் இதுவரையில் இராணுவத்தினரால் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன - என்றார்.
காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு அண்மையாகவுள்ள காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். அங்குள்ள வீடுகளை மக்கள் பொறுப்பெடுக்கும் வரையில் இராணுவத்தினர் மூலம் அவற்றைப் பாதுகாத்துத் தருமாறு யாழ். மாவட்டச் செயலர் இதன்போது விடுத்த கோரிக்கையையும் அவர் ஏற்றுக்கொண்டார்.
மேலும், காங்கேசன்துறையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்க் கிடங்குகளுக்கு கூட்டுத்தாபனத்தால் ஒரேயொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அது போதாது எனவும் அதிகளவிலான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும் என்ற தனது அவதானிப்பையும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியதாக யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்தார். (அ-ஒ-5,26,125)

### முரண்டு...

சிங்க பரிசீலித்து வருகின்றார் என தெரியவருகின்றது.
ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி லொக்குகே, ரோஹித அபேகுணவர்த்தன, எஸ்.எம். சந்திரசேன உள்ளிட்ட தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதிக்கு அழுத்தம் பிரயோகித்துவருகின்றது. மொட்டுக் கட்சியின் இந்த நகர்வால் ஜனாதிபதி கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.
தான் அழைத்த கூட்டத்தை மொட்டுக் கட்சியின் மாவட்டத் தலைவர்களைப் புறக்கணித்தமை தொடர்பாகவும் ஜனாதிபதி கடும் கோபத்தில் உள்ளார் என்று தெரியவருகின்றது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துக்கு மொட்டுக் கட்சியால் சவால் விடுக்கப்படும் பட்சத்தில், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (அ-எ-44)

### கேட்காமலேயே...

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ராஜபக்சக்கள் ஆரம்பித்த சிறிலங்கா பொதுஜன பெரமுன இன்னமும் வீரியத்துடன் உள்ளது. இந்த ஆட்சியின் பிரதான பங்காளர்கள் மொட்டுக் கட்சியினர் என்பதை எவரும் மறக்கக்கூடாது.
தேர்தல்களை எதிர்கொள்ளத் துணிவில்லாதவர்கள் மொட்டுக் கட்சி மக்கள் ஆணையை இழந்துவிட்டது என்று இன்று பிதற்றுகின்றார்கள். அவர்களுக்குக் கடந்த தேர்தல்களில் மக்கள் எப்படிப் பாடம் புகட்டினார்கள் என்பது தெரியும். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆசனத்தில் மொட்டுக் கட்சியே அமர்த்தியது. ஜனாதிபதியிடம் அமைச்சுப் பதவி கேட்டு வாக்குவாதம் செய்ய வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. ஜனாதிபதி நன்றி மறந்து செயற்படமாட்டார் என்றும் நாம் நம்புகின்றோம் - என்றார். (அ-எ-22)

### அசையாது...

தற்போது தேர்தல்கள் நடத்துவதற்கான காலம் அல்ல. ஆனால், ஜனாதிபதி நினைத்தால் எந்தத் தேர்தலையும் இந்த வருடம் நடத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். எனினும், இந்த வருடம் தேர்தல்களை நடத்த அவர் விரும்பவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வதே ஜனாதிபதியின் நோக்கம்.
ஜனாதிபதிக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரச பங்காளிக் கட்சிகள் அனைத்தும் முழு ஆதரவைத் தொடர்ந்து வழங்குகின்றன. எதிரணி வரிசையில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்றன. எனவே, அனைவரும் ஓரணியில் நின்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் - என்றார். (அ-எ-22)

### ரணிலுக்கு...

உச்சி மாநாட்டில் உயர்மட்ட குழு விவாதத்தில் உரையாற்ற வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
இந்த உச்சி மாநாடு எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய நெருக்கடிக்குத் தீர்வுகாண வடக்கு மற்றும் தெற்கு நாடுகளுக்கு இடையே ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்கும் முயற்சியில் ஒரு புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான உலகளாவிய தலைவர்கள் உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### கூரையைப்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. வீட்டிலிருந்த இரு பெண்களும் உறக்கத்தில் இருந்தபோது வீட்டில் இந்த திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.
நேற்றுக்காலை வீட்டின் அறையில் இருந்த கைப்பையும், அதற்குள்ளிருந்த நகைகளும் காணாமற் போயிருந்ததை அடுத்தே வீட்டில் நகைகள் களவாடப்பட்டமை தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-எ-20)

### ஐரோப்பாவுக்குள்...

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையர்களும் உள்ளடங்குகின்றனர் என்று கூறப்படுகின்றது.
ஆள்களைக் கடத்தும் முகவர்களால் ருமேனியாவில் இருந்து எல்லையைக் கடந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் 'கெண்டெய்னரில்' கொண்டு செல்லப்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்களில் எவருக்கும் பாதிப்பில்லை என்று தெரிவிக்கப்படும் நிலையில், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (அ-எ-இ)

### போதைக்கு...

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது.
இந்த இளைஞர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாக இருந்துள்ளார். இவரது நடத்தை தொடர்பாக பெற்றோர் பொலிஸாருக்குத் தெரிவித்திருந்த நிலையில், சுமார் 8 மாதங்களாக நன்னடத்தை வழிகாட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவருக்கு மருத்துவமனையிலும் சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த திங்கட்கிழமை வீட்டில் எவரும் இல்லாத நேரத்தில் அறையில் தூக்கில் தொங்கித் தனது உயிரை இளைஞர் மாய்த்துக் கொண்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை மன்னார் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எஸ்.ஈ.குமணகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க அவர் உத்தரவிட்டார். (அ-எ60)

### காங்கேசன்துறை...

சென்னை துறைமுகத்தில் இருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்த இந்தக் கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்குச் சென்று பின்னர், காங்கேசன்துறைமுகம் சென்று திரும்பும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்தக் கப்பல் எதிர்வரும் சனிக்கிழமை காங்கேசன்துறைமுகத்துக்கு வரவுள்ள நிலையில், அதை துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழு வரவேற்கும் என்று அறியமுடிகின்றது. (அ-எ-இ)

### காங்கேசன்துறைமுகம்...

காங்கேசன்துறைமுகப் பகுதியில் மக்கள் தங்ககம், குடிவரவு, குடியகல்வு கட்டிப்பாட்டுப் பிரிவு போன்றவற்றை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. அவையே நாளைமறுதினம் திறக்கப்படவுள்ளன.
துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர், திணைக்களப் பணிப்பாளர், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி உள்ளடங்கிய குழு நாளைமறுதினம் காங்கேசன்துறை வருகின்றது.
இதேநேரம் இந்தக் குழுவினர் காங்கேசன்துறை துறைமுக திறப்பு விழாவின் பின்னர் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் பங்குகொள்ளவுள்ளனர். (அ-எ-இ)

### 3 வயதுச்...

ஆதவன் லிதுசிகன் (வயது-3) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். வீட்டுக் கேற்றில் ஏறி விளையாடியபோது கேற் கழன்று சிறுவன் மீது வீழ்ந்தது என்று கூறப்படுகின்றது.
சிறுவனின் உடல், உடற் கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபையால் நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், ஜூன் 15 யாழ்.மாநகரசபையால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நீராவியடி யிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி இந்த நடமாடும்சேவை நடத்தப்படவுள்ளது. இதில் 8 ஆம், 9ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம், சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் உள்ளிட்ட சேவைகள் இடம்பெறவுள்ளன. பொதுமக்கள் இதுவரைகாலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கையை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)


## சிறுநீரகம் தேவை

O+ அல்லது O- வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு: 077 33 500 49
077 77 669 76

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரின் மையப் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. யாழ் மத்திய பேருந்து நிலையம், பொதுச்சந்தை, வைத்தியசாலை ஆகியவற் றுக்கு 20 நிமிட நடை பயணதூரம். யாழ் பண்ணைக் கடற்கரைக்கு மிக அருகில் அமைதியான சூழலில் உள்ளது. தங்குமிட வசதி, நட்சத்திர விடுதி கட்டுவதற்கு உகந்த இடம். விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தரகர் தேவையில்லை) அத்துடன் குறிப்பிட்ட காணிக்கு முன்பாக 1 1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

074 062 1242 (CS/50857) AH-1

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lanka Tile Show Room இற்கு கீழ்க்குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை.

- ✓ மனேஜர் - Tile Show Room ஆண் சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்கள்
- ✓ கணக்கு பதிவாளர் - ஆண்
- ✓ பணியாளர்கள் - ஆண் 2 பேர்
- ✓ விற்பனை முகவர்கள் - Tile, Cement ஆண்

இம்மாதம் 14,15,16 ஆம் திகதிகளில் வதிவிடச் சான்றிதழ், குடும்ப அட்டைப் பிரதி, கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்பத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை பிரதி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். (CR/401227)AH-1

குருஹாட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

## வர்த்தகம் DMI Jaffna

**English** (ஆங்கில English Medium நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்)

- Acc. :- D.Sam
- B.St. :- T.S.Richi
- E.CO. :- P.Ajanthan

**தமிழ்**

- கணக்கீடு :- D.Sam
- வணிகக்கல்வி :- T.S.ரிஷி
- பொருளியல் :- KR.உதயன் & S.S.சிறி

A/L - 2025
ஆரம்பம்: 17.06.2023
காலை: 9.00
f Dmi Daniel 077 848 0604

## கலை DMI Jaffna

- தமிழ் - R.S. சந்திரசேகர்
- இந்துநாகரிகம் - P.ஜோதீஸ்வரன்
- வரலாறு - M. பத்மன்
- புவியியல் - N. பாபு
- அரசியல் - K.S. இளங்கோ
- அளவையியல் - E.S. பவன்
- விவசாயம் - V. சசி
- கிறிஸ்தவம் - M. ஸ்ரீபன்
- நாடகம் -K. மங்களேஸ்
- ஊடகம் -K.V. நவநீதன்
- மனைப்பொருளியல் -V. சசி
- ICT - N. அம்பி

A/L - 2025
ஆரம்பம்: 17.06.2023
காலை: 9.00
f Dmi Daniel 077 848 0604

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 05 . 1945 — மறைவு 14 . 06 . 2023

**திரு.மயில்வாகணம் மகேந்திரன் (மகம்)**

'துவாரகை' அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சேர்.பொன் இராமநாதன் வீதி, உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திரு.மயில்வாகணம் மகேந்திரன் (மகம்) நேற்று (14.06.2023) புதன்கிழமை அதிகாலை வேளையில் இறைபதம் எய்தினார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.: 021 224 0692
077 652 5446 (cr.40128) (N-1)

தகவல்: குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு உண்டு

- * யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- * பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- * புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
- * மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- * வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
- * பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
- * நன்னீரூற்று.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.

- * கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
- * கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
- * இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- * ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 4365 814

## மரண அறிவித்தல்



மண்ணில் 01 . 09 . 1951 — விண்ணில் 14 . 06 . 2023

**தம்பையா மோகனதாஸ்**

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா மோகனதாஸ் நேற்று (14.06.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கிரிஷாவின் பாசமிகு அன்புக் கணவரும், லதா, ரூபன், லலிதா, கலஞ்சென்ற பிறேமலா, சுமங்கலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ், யசிந்தன், பிரியதர்சன் (பிரான்ஸ்), பிரியாவின் அன்பு மாமனாரும், தருண், விஷ்ணு, கிர்த்திகா, துஷ்யந்தன், லக்ஷன், லதினாஸ், டிஷானா, லஜீவன், லஜாவன், லக்ஷனன், ஸ்வேன் (பிரான்ஸ்), ஸஸ்வின் (பிரான்ஸ்), ஸாரா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கருங்காலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர்.

தகவல்: யசிந்திரராஜா லலிதா
(cs 24132) (2.6) 077 606 3413

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 02.05.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப அன்புறவு

**சத்தியநாதன் சத்திஆனந்**



அன்னை மடியில் 25.07.1989 — ஆண்டவன் அடியில் 02.05.2023

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (15.06.2023) வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதுக்கலட்டி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

குடும்பத்தினர் 077 509 8547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.